IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **38/21** |
| | | D/W's | : | **PW 1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | சித்ரா | CASTE | : | – |
| W/O. | சரவணன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | ஆண்டிப்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **47** |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2024

**குறுக்கு விசாரணை**

**1.** தாவா சொத்து எனது பூர்வீக சொத்து. எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் எனது அப்பாவுடன் சேர்த்து இரண்டு ஆண்கள், ஒரு பெண் ஆவார்கள். எனது அப்பாவிற்கு இரண்டு பிள்ளைகள், நானும் எனது அண்ணனும் ஆவோம். எனது தாத்தாவிற்கு மொத்தம் 5 அடி நிலம் இருந்தது, அதை பிரித்ததில் எனது அப்பாவிற்கு ஒண்ணேகால் அடி நிலம் பங்காக கொடுத்தார்கள்.

**2.** இந்த வழக்கில் பொதுவான சொத்தின் மேல் பத்திரம் போட்டதால் அந்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண். 13/32, அதன் கிழமேல் அளவு 16 1/2 அடி, தென்வடல் அளவு 33 அடி. பிரதிவாதி எனது உறவினர் கிடையாது. நான் சிறு வயதிலிருந்தே வழக்குச் சொத்தில் யார் புலங்குகிறார்கள், அனுபவிக்கிறார்கள் என்று பார்த்துள்ளேன்.

**3.** வழக்குச்சொத்து ஆதியில் ரெங்கசாமிரெட்டியார், வாலகுருவா ரெட்டியார், நாகு ரெட்டியார் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது. வழக்குச்சொத்து மேற்படி நபர்களுக்கு எப்படிப்பாத்தியப்பட்டது என்பது தெரியாது. மேற்படி மூன்று நபர்கள் வழக்குச் சொத்தை கிரயமாக வாங்கவில்லை. மேற்படி மூன்று நபர்களில் நான் வாலகுருவாரெட்டியாரின் வாரிசு. மேற்படி மூன்று நபர்களில் யார் மூத்தவர், யார் இளையவர் என்று எனக்குத்தெரியாது.

**4.** ரெங்கசாமி ரெட்டியாருக்கு குருசாமி, அழகர்சாமி, சீத்தாராமன் ஆகியோர் வாரிசுகள் ஆவர். ரெங்கசாமி ரெட்டியாரின் வாரிசுகளுக்கு பாகப்பிரிவினைப்படி எவ்வளவு பாகம் கிடைத்து அனுபவம் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. வழக்குரையில் ரெங்கசாமி ரெட்டியார் வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்ட பாகம் குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் கொடுத்த ஆவணங்களின் படி குறிப்பிடப்பட்டுள்ளது. ரெங்கசாமி ரெட்டியாருக்கும், நாகுரெட்டியார், வாலகுருவா ரெட்டியார்_ஆகியோர் பாகப்பிரிவினை செய்து

கொண்டார்கள். அதை பத்திரமாக எழுதினார்களா என்று எனக்குத் தெரியாது.

5. ரெங்கசாமி ரெட்டியாருக்கு ஒதுக்கப்பட்ட பாகம் குறித்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பிராதில் ரெங்கசாமி ரெட்டியாருக்கு பாகமாக கிழமேல் 5 அடியும், தென்வடல் 33 அடியும் ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன். பிராதில் 4வது பத்தியில் " வாலகுருவாரெட்டியாரின் வாரிசான முத்துரெட்டியாருக்கு குருசாமி ரெட்டியார் வகையறா இடத்திற்கும் கிழ்க்கே " என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இதில் சொல்லப்பட்டுள்ள குருசாமி ரெட்டியார் என்பவர் 3ம் நபரா அல்லது ரெங்கசாமி ரெட்டியாரின் வாரிசா என்றால் அவர் ரெங்கசாமி ரெட்டியாரின் வாரிசு.

6. ரெங்கராமி ரெட்டியாரின் பாகத்திற்கு கிழக்குப்பக்கம் எனது தாத்தா வாலகுருவா ரெட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது. எனது தாத்தா வாலகுருவா ரெட்டியாருக்கு முத்துரெட்டியார், சப்பாணி என்ற ராமச்சந்திரன் ஆகியோர் வாரிசுகள் ஆவர்.

7. ரெங்கசாமி ரெட்டியார், வாலகுருவாரெட்டியார், நாகு ரெட்டியார் ஆகியோருக்கு 16 1/2 அடி அகலம், 33 அடி நீளம் உள்ள நிலத்தில் பாகப்பிரிவினைப்படி தலா 5அடி அகலம் 33 அடி நீளம் ஒதுக்கப்பட்டது, மீதம் உள்ள 1 1/2 அடி அகலம் உள்ள நிலம் பொதுவாக ஒதுக்கப்பட்டது. எனது பிராதில் 4வது பத்தியில் வாலகுருவாரெட்டியாரின் வாரிசான முத்துரெட்டியாருக்கு குருசாமி ரெட்டியார் வகையறா இடத்திற்கும் கிழ்க்கே கிழமேல் 6 1/4 அடியும், தென்வடல் 33 அடியும் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது 5 அடி அவர்கள் கிரையம் வாங்கியது 1 1/4 அடி இரண்டையும் சேர்த்து 6 1/4 அடி என்று குறிப்பிட்டுள்ளேன்.

8. கோதையம்மாள் என்பவர் நாகுரெட்டியாரின் மகன் ராமுரெட்டியாரின் மனைவி ஆவார்.மேற்படி கோதையம்மாளுக்கு கிழமேல் 1 1/4 அடியும் தென்வடல் 33 அடியும் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.நாகு ரெட்டியாருக்கு பாலு, கோவிந்தன், வெள்ளைச்சாமி, ராமுரெட்டியார் ஆகியோர் வாரிசுகள் ஆவர். பிராதில் நாகுரெட்டியாரின் வாரிசுகள் யார் என்று சொல்வில்லை. நாகுரெட்டியாரின் வாரிசுகளில் கோதையம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட 1 1/4 அடி அகலமுள்ள பங்கை தவிர மற்ற வாரிசுகளுக்கு எவ்வளவு பங்கு என்று பிராதில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை.

9. வாலகுருவா ரெட்டியாரின் வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு கிழக்கேதான் நாகுரெட்டியார் சொத்து என்றால் சரிதான். வாலகுருவா ரெட்டியாரின் பங்கில்தான் அவரது வாரிசான சப்பாணி என்ற ராமச்சந்திரன் என்பவரும் பங்கு உள்ளது என்றால் சரிதான். சப்பாணி என்ற ராமச்சந்திரனுக்கு நாகு ரெட்டியாரின் பங்குச்சொத்திற்கு மேற்குப்புறம்தான் பங்கு இருக்கவேண்டும் என்றால் சரியல்ல. பிராதில் கோதையம்மாள் பங்கிற்கு கிழக்கே சப்பாணி என்ற ராமச்சந்திரனுக்கு பங்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**10.** வா.சா.ஆ.7 வரைபடத்தில் பிராதில் சொல்லியுள்ளபடி பாகம் பிரித்து காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கிற்காக நானாக தயார் செய்தது, வழக்கிற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. பிராதில் வாலகுருவா ரெட்டியாரின் வாரிசுகளுக்கு 8 1/4 அடி X 33 அடி பாகம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தவறாக குறிப்பிடப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல.

**11.** வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை தண்ணீர் தர்மம் நடத்துமிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.வா.சா.ஆ.2ன் கிரையப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண். 13/7பி என்றும், சொத்தின் விஸ்தீரணம் 2 செண்டில் கிழமேல் 16 1/2 அடி, தென்வடல் 39 1/2 அடி என்று உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி வழக்குச்சொத்தை குறிப்பிடாமல் பிராதில் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**12.** வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தில் தண்ணீர் தர்மம் நடத்துமிடம் என்றுள்ளது. .வா.சா.ஆ.1ன் கிரையப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண். 13/7பி என்றும், சொத்தின் விஸ்தீரணம் 2 செண்டு என்றும், தென்வடல் வீதிக்கு மேற்கே என்றும், குருசாமி ரெட்டியார் மனைக்கு கிழக்கே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து வழக்குச்சொத்து இல்லை என்றால் சரியல்ல.

**13.** வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி பத்திரத்தில் உள்ள சொத்தில் ஓட்டு செட்டு இருந்தது என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாடிப்பட்டி.**

**ST/Thiru.M.P.Ramkishore**
**True Copy**